# இராமேஸ்வரம் நகர் மன்றகூட்டம்

## 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25ம் தேதி காலை 11 : 00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்றக் கூட்ட நடவடிக்கை

## முன்னிலை: அ. வீரமுத்துகுமார் B.Tech., தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர், இராமேஸ்வரம் நகராட்சி

| பொருள் எண் | பொருள்விபரம் | தீர்மானவிபரம் |
|---|---|---|
| 1 | நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2019–2020ன் கீழ் இராமேஸ்வரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்த சாலைகளை சீரமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 17349/2019/இ3 நாள் :03–09–2019 ன் கீழ் ரூ.300.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்ய அனுமதி வழஙகப்பட்டதை தொடர்ந்து இந்நகராட்சிக்குட்பட்ட பழுதடைந்த சாலைகள் தேர்வு செய்யப்பட்டு கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | தீர்மானம் எண். 260 அனுமதிக்கப்பட்டது. |

| S. No | Name of Work | Type of Road BT/CC/PB | Ward No | Length in km | Width in m | Est. Amount Rs.in.Lakh |
|---|---|---|---|---|---|---|
| 1 | Improvements and Relaying of BT surface by using paver machine and Retaining wall arrangemnts from | BT | 21, 19, 20, 12, 14 & 10 | 2.330 | 6.00 & 4.00 | 200.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | Eswariamman Kovil Car Parking to Sambai-Mangadu Road Junction and by using paver machine at Eswariamman Kovil Car Parking Main Road, Sudukattanpatti 2nd cross street, Sudukattanpatti Main Road, Murungaivadi OHT-Katchakulam Junction Road, Kattupillaiyar kovil street and Kizhakadu cross street. | | | | | |
| 2 | Improvements and Relaying of BT surface by using paver machine at Mangadu main road, Sambai-parvatham junction road, Theetchathar kollai Main Road, Aathikadu North Road, Poomariyamman kovil road and Manthai Mariyamman Kovil road. | BT | 19, 16, 13, 14, 6 & 10 | 2.140 | 4.00 & 7.00 | 100.00 |
| Total | | | | 4.470 | | 300.00 |

**நிதி ஒதுக்கீடு விபரம் ( ரூ. கோடியில்)**

| மதிப்பீட்டு தொகை | தமிழ்நாடு நகர்புர சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி | மாநில நிதிக்குழு / மத்திய நிதிக்குழு மானிய நிதி / நில அபிவிருத்திக் கட்டணம் | நகராட்சி பங களிப்பு |
|---|---|---|---|
| 3.00 | 1.05 | 1.35 | 0.60 |

| | | |
|---|---|---|
| | <u>**அலுவலகக்குறிப்பு:**</u><br>1. தேர்வு செய்யப்பட்டுள்ள 4.470 கிமீ நீளத்திற்கு தார் சாலை அமைக்கும் பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம் சென்னை அவர்களுக்கு மதிப்பீடுகள் சமர்ப்பிக்கலாம்.<br>2. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி மொத்த மதிப்பீட்டு தொகை ரூ.3.00 கோடியில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி ரூ.1.05 கோடி, மாநில நிதிக்குழு / மத்திய நிதிக்குழு மானிய நிதி/ நில அபிவிருத்திக்கட்டணம் ரூ.1.35 கோடி மற்றும் நகராட்சி பங்களிப்பு நிதி ரூ.0.60 கோடி ஆகமொத்தம் ரூ.3.00 கோடியில் சாலைப்பணிகள் செய்ய மன்றம் அனுமதிக்கலாம். | |
| **2** | இராமேஸ்வரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் விடுபட்ட வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் சிறிய மற்றும் நடுத்தர நகர் அபிவிருத்தி திட்டம் – சுழச்சி நிதியின் கீழ் (UIDSSMT – Revolving Fund) ரூ.69.00 இலட்சம் மதிப்பீட்டில் வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.13277/2018/குவ1, நாள்.19.06.2018 ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் மதிப்பீட்டிற்கு தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.13277/2018/DO2 நாள்.06.12.2018ன்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள 10.06.2019 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி துவஙகும் நிலையில் உள்ளது. இந்நிலையில் இராமேஸ்வரம் நகராட்சி குடிநீர் விநியோக உப விதிகள் 2018ன் படி கீழ்காணும் விபரப்படி கட்டணம் நிர்ணயம் செய்துகொள்ள தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | **தீர்மானம் எண். 261 அனுமதிக்கப்பட்டது.** |

| வ. எண் | வகை | குடியிருப்பு | | வணிகம் மற்றும் தொழிற்சாலை (ரூபாயில்) | |
|---|---|---|---|---|---|
| | | தார் சாலை | சிமெண்ட் சாலை | தார் சாலை | சிமெண்ட் சாலை |
| 1. | டெபாசிட் தொகை | 5000 | 5000 | 15000 | 15000 |
| 2. | சாலை சீரமைப்பு கட்டணம் | 2243 | 2990 | 2243 | 2990 |
| 3. | இணைப்பு பொருட்கள் மற்றும் பணியாளர் செலவு | 3011 | 3070 | 3011 | 3070 |
| 4. | மேற்பார்வை கட்டணம் | 1000 | 1000 | 1000 | 1000 |
| 5. | விண்ணப்பக் கட்டணம் | 100 | 100 | 100 | 100 |
| 6. | விண்ணப்ப பதிவு கட்டணம் | 500 | 500 | 500 | 500 |
| | | 11854 | 12660 | 21854 | 22660 |

வரிசை எண்.4ல் காணும் மேற்பார்வைக் கட்டணம் குடிநீர் விநியோக உபவிதி எண்(1)(a) குடிநீர் இணைப்பிற்காக தயாரிக்கப்படும் மொத்த மதிப்பீட்டு கட்டணத்தில் 15 சதவிகிதம் செண்டேஜ் மற்றும் ஆய்வுக் கட்டணமாக வசூலிக்கப்படும். குறைந்தளவு ஆய்வுக்கட்டணம் ரூ.1000/– வசூலிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி குறைந்தளவு ஆய்வுக்கட்டணம் ரூ.1000/– வசூல் செய்து கொள்ளவும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| | மேற்காணும் கட்டணங்கள் நிர்ணயம் செய்திடவும் மேற்படி கட்டணத் தொகையினை 10 சமகால தவணைத் தொகைகளில் வீட்டு வரியுடன் சேர்த்து கீழ்க்காணும் விபரப்படியாக நிர்ணயம் செய்து வசூல் செய்திடவும் தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | |

| 10 தவணைகளுக்காக மொத்த தொகை | | | |
|---|---|---|---|
| **குடியிருப்பு** | | **வணிகம்** | |
| தார்சாலை | சிமெண்ட் சாலை | தார்சாலை | சிமெண்ட் சாலை |
| 11854 | 12660 | 21854 | 22660 |
| 1 தவணைக்கான திருப்பி செலுத்த வேண்டிய தொகை | | | |
| **குடியிருப்பு** | | **வணிகம்** | |
| தார்சாலை | சிமெண்ட் சாலை | தார்சாலை | சிமெண்ட் சாலை |
| 1185 | 1266 | 2185 | 2266 |

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்கண்டவாறு தொகை நிர்ணயம் செய்துகொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட குடிநீர் திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி மேற்காணும் கட்டண விகிதத்தில் குடிநீர் குழாய் இணைப்பு வழங்குவதற்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| 3 | இராமேஸ்வரம் நகராட்சிக்குட்பட்ட புல எண் 83/8A1A1 என்னுமிடத்தில் 108 அடி உயர அனுமர் சிலை நிறுவ அனுமதி வேண்டி ஹரிஸ் சந்த் சந்தா கல்வி மற்றும் தொண்டு அறக்கட்டளை சார்பில் திரு.ராஜ்பால்சிங் என்பவர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு விண்ணப்பம் செய்துள்ளார்.<br>அவ்விடமானது, ஒலைக்குடா பகுதி புல எண் 83/8A1A1 ல் 2 ஏக்கர் 32 செண்ட் நிலமும் , புல எண் 83/9B1B2இல் பாதைக்கு 10 செண்ட் நிலமும் , இராமநாதபுரம் வட்டம் உச்சிப்புள்ளி கிராமத்தினை சேர்ந்த திரு.முருகநாதன் அவர்களின் மனைவி திருமதி. சுமதீஸ்வரி என்பவரிடம் கிரைய ஆவண எண் 934/2018 நாள் : 31–05–2018 ல் கிரையம் பெற்று, அறக்கட்டளை நிர்வாகத்தில் உள்ளது. மேற்படி இடத்தின் அருகில் குடியிருப்புகள் ஏதுமில்லை, இடமானது காலி நிலமாக உள்ளது.<br>மேற்படி இடத்தினை கோட்டாட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுடன் ஆய்வு செய்யப்பட்டு இந்நகராட்சியின் மூலமாக 20–07–2018ல் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டது.<br>மேலும் தற்போது, அவ்விடத்தில் 108 அடி அனுமர் சிலை நிறுவ **அரசாணை (நிலை) எண் : 206 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை நாள் : 01–07–2019ல்** அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br>அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண். 262 அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| **4** | இராமேஸ்வரம் நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் தொடர்பான விளம்பர அறிவிப்பினை விளம்பரம் செய்த வகையில் தினசரி நாளிதழான மாலை முரசு க்கு ரூ.21000/– வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br><br>அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண். 263 அனுமதிக்கப்பட்டது.** |
| **5** | இராமேஸ்வரம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டுவரும் TN 21 BC 1248 வாகனபழுதாகி உள்ளதை பழுது நீக்கம் செய்வதற்கு கீழ்காணும் விபரப்படி விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>வ.எண் / நிறுவனத்தின் பெயர் / பழுது நீக்க கட்டணம்<br>**1** / N.S.Auto Electrical Works / **92079.20**<br>**2** / Sri Vignesh Engineering Works / **102575.40**<br>**3** / A.R. Engineering Works / **110054.20**<br><br>மேற்காணும், விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள வ.எண் 1ல் உள்ள N.S.Auto Electrical Works நிறுவனத்திற்கு வாகனத்திற்கு பழுது நீக்க ஆணை வழங்க மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br><br>1. பொதுசுகாதார அவசிய அவசரம் கருதி மேற்காணும் பணியினை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.<br>2. மேற்காணும் நிறுவனங்களில் குறைந்த விலைப்பு கொடுத்துள்ள N.S.Auto Electrical Works நிறுவனத்தின் விலைப்புள்ளியை அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண். 264 அனுமதிக்கப்பட்டது.** |

<table>
<tr>
<td>6</td>
<td>
இராமேஸ்வரம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டுவரும் TN65 J1179 வாகனத்திற்கு தேவையான Tyre , Tube and Flap சப்ளை செய்வதற்கு கீழ்காணும் விபரப்படி விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>Tyre</th><th>Tube</th><th>Flap</th></tr>
<tr><td>1</td><td>N.S.Auto Electrical Works</td><td>55200</td><td>4481</td><td>2304</td></tr>
<tr><td>2</td><td>A.R. Engineering Works</td><td>61200</td><td>5100</td><td>3000</td></tr>
<tr><td>3</td><td>Sri Vignesh Engineering Works</td><td>59400</td><td>4800</td><td>2700</td></tr>
</table>
<br>
மேற்காணும், விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள N.S.Auto Electrical Works நிறுவனத்திற்கு சப்ளை ஆணை வழங்க மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br><br>
1. பொதுசுகாதார அவசிய அவசரம் கருதி மேற்காணும் பணியினை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.<br>
2. மேற்காணும் நிறுவனங்களில் குறைந்த விலைப்பு கொடுத்துள்ள N.S.Auto Electrical Works நிறுவனத்தின் விலைப்புள்ளியை அனுமதிக்கலாம்.
</td>
<td>தீர்மானம் எண். 265 அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| **7** | இராமேஸ்வரம் நகராட்சிபகுதிகளில் விளம்பரஙகள் / விளம்பரப்பலகைகள் முறைப்படுத்துதல், நிறுவ அனுமதி வழஙகுதல் குறித்த அரசாணைகள் , சட்டதிருத்தஙகள் மற்றும் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.<br><br>1. அரசாணை எண் G.O(4D) No : 02 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC1, நாள் : 05–06–2018.<br>2. தமிழ்நாடு அரசிதழ் வெளியீடு Part IV Section 02 நாள் : 16–07–2018<br>3. அரசாணை எண் 15, 16 மற்றும் 17 நாள் : 31–01–2019.<br>4. தமிழ்நாடு அரசிதழ் வெளியீடு Part III Section 1(a) நாள் : 31–01–2019<br><br>மேற்காணும் , அரசாணை‘கள் மற்றும் அரசிதழ் வெளியீடுகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு:**<br><br>மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். | **தீர்மானம் எண். 266 அனுமதிக்கப்பட்டது.** |

**ஆணையாளர்/தனிஅலுவலர்,**
இராமேஸ்வரம் நகராட்சி.